**எஸ்.அபூபக்கர் ஸித்திக்.,**
B.Com.,B.L.,B.Ed.,B.L.I.Sc.,
வழக்கறிஞர்
ஊரக காவல் நிலையம் அருகில்
காங்கயம் மெயின் ரோடு,நல்லூர்
திருப்பூர் 641 606
செல்:9842671896,9244555024

<u>வக்கீல் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு முடிவுபடி</u>
<u>திருப்பூரில் சட்ட உதவி மையம் துவக்கம்</u>

பொதுமக்களின் சட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வக்கீல் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு முடிவுபடி சட்ட உதவி மையங்கள் துவக்கப்பட்டு அதன் மூலம் சட்ட உதவிகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு வழக்கறிஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி திருப்பூரில் நல்லூர் ஊரக காவல் நிலையம் அருகில் சட்ட உதவி மையம் " புதன்கிழமை முதல் செயல்படும்.

பொதுமக்களின் பிரச்சனைகளை துறைவாரியாக பிரித்து , அந்தந்த துறையின் மூலமும், திருமணம்,விவாகரத்து,குடும்ப பிரச்சனைகளுக்கு சமரசத்தின் மூலமும் விபத்து ,காப்பீடு வழக்குகள் காப்பீட்டு நிறுவனங்களின் மூலமும், காசோலை மோசடி வழக்குகளை சட்ட உதவி மையத்தின் மூலமாகமும் தீர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்படும். நீதிமன்றங்கள், மேல்முறையீட்டு மன்றங்கள், தீர்பாயங்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபரே நேரில் சென்று பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளும் வகையில் தேவையான உதவிகள் செய்யப்படும். அதற்கான மனுக்கள், வழக்குரைகள் சட்ட உதவிமையத்தின் மூலம் தயார் செய்து வழங்கப்படும். பொதுமக்கள் தங்கள் வழக்கில் தாமே ஆஜராகும் முறையில் சட்டஅறிவு வழங்கப்படும்.

நீதிதுறையின் மீதான வன்முறை தாக்குதல் குறித்து சட்டபடியான நடவடிக்கை எடுக்காத தமிழக அரசு வழக்கறிஞர்களை அரசியல் ரீதியாக பிரிக்கமுயலும் முயற்சிகள் கண்டிக்கத்தக்கது. பிரித்தாலும் சூழ்ச்சிகளுக்கு வழக்கறிஞர்கள் ஆட்படமாட்டார்கள் என்பதை உணர்த்தியும் திருந்தாத மாநில அரசு , பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என பிரச்சனையை திசைதிருப்புவது விந்தையாக உள்ளது.

சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் போக்குவரத்து குற்றங்களில் நீதிமன்றத்திற்குச் சென்று அபராதம் கட்டுவது குறித்துகூட பொதுமக்களுக்கு சட்டவிழிப்புணர்வு கொடுக்கமுடியாத மத்திய , மாநில அரசுகள், அரசு துறைகளில் லஞ்சத்தை ஒழிக்க முயற்சிக்காத ஆட்சியாளர்கள், பொதுமக்களின் சட்டபிரச்சனைகளுக்கு வழக்கறிஞர்கள் மீது பழிபோடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

சென்னை சட்டகல்லூரி மோதலில் காவல்துறையினரின் செயல்பாட்டினையும், நீதிமன்றத்திற்குள் வழக்கறிஞர்கள் மீதான தாக்குதலில் காவல்துறையின் அத்துமீறல்கள் குறித்தும் பொதுமக்கள் அச்சத்துடன் இருந்து வரும்

நிலையில், பொதுமக்களின் பிரச்சனைகளுக்கு வழக்கறிஞர்கள் என்றும் உறுதுணையாக இருப்பார்கள்.

நீதித்துறையின் மீதான தாக்குதலுக்கு உருப்படியான நடவடிக்கை எடுக்காமல் வழக்கறிஞர்கள் சங்கத்தின் மதிப்புக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது என குறைகூறுவோர் தாம் வகிக்கும் பதவியின் மதிப்பை, கௌரவத்தை காக்கவும், பொதுமக்களின் அச்சத்தை போக்கவும் முன்வரவேண்டும்.

காவல்துறையின் அத்துமீறல்கள் அப்பட்டமாக தொலைக்காட்சிகள், செய்திதாள்கள் மூலம் படம்பிடித்து காட்டப்பட்டும் தாக்குதல்கள் குறித்து ஆதாரங்கள், விளக்கங்கள் கேட்பது அதிகார மையத்தின் இயலாமையை காட்டுகிறது.

பொதுமக்களுக்கு உதவிட வழக்கறிஞர்கள் எல்லா சூழ்நிலைகளிலும் தயாராகவே உள்ளனர் என்பதை உணர்த்தவே " சட்ட உதவி மையங்கள் " ஏற்படுத்தப்படுகின்றன.ஆகவே பொதுமக்கள் தங்களின் எந்த சட்ட பிரச்சனையாக இருப்பினும் தயங்காமல் தொடர்புகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எஸ்.அபூபக்கர் ஸித்திக்.,
B.Com.,B.L.,B.Ed.,B.L.I.Sc.,
வழக்கறிஞர்